## சாதாரணகூட்டநிகழ்ச்சிநிரல்

**கூடலூர் நகராட்சியில் ஆகஸ்ட் மாதம் (30.08.2019) ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்றதீர்மானங்கள்.**

**பொருள்.1**

நகராட்சிஆணையாளர் அவர்களின் 07/2019 ஆம் மாதத்தியநாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண்.652,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்:2**

நகராட்சிபொறியாளர் அவர்களின் 07/2019 ஆம் மாதத்தியநாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண்.653. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.3**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-10, பெத்துக்குளத்தில் அமைந்துள்ள குப்பைக்கிடங்கில் உள்ள குப்பைகளை BIO-MINNING மூலம் அப்புறப்டுத்தும் பணி நடைபெறும் பகுதியில் செல்லும் தாழ்வழுத்த மின் பாதையினை மாற்றி அமைக்க உதவி பொறியாளர், மின் பகிர்மானம்,கூடலூர் அவர்களின் கடித எண்.உமிபொ/பகி/கூடலூர்/வ.M/கோ.கா/ஆ.எண்.175/2019 நாள்.25.07.2019ன்படி செலுத்தப்பட வேண்டிய மதிப்பீட்டு தொகை ரூ.5050/-ஐ தமிழ் நாடு மின் பகிர்மான கழகத்திற்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது. **( ந.க.எண்.945 /2018 /இ1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.654 ,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.4**

கூடலூர் நகராட்சிக்குட்பட்ட சந்தை வளாகத்தில் உள்ள பழைய துப்புரவு பணியாளர் குடியிருப்பில் பயன்பாட்டில் உள்ள மின் இணைப்பு எண்களான G-1356 மற்றும் G-1357 ஆகிய இரண்டு மின் இணைப்புகளை தற்காலிக மின் துண்டிப்பு செய்ய வேண்டியதற்கு உதவி பொறியாளர், மின் பகிர்மானம், கூடலூர் அவர்களின் கடிதஎண்.உமிபொ/இ&பே/கூட/வ.ஆ/கோ.கா/ஆ.எண்.176/2019 நாள்.**25.07.2019**ன்படி செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தொகை ரூ.1009/-ஐ தமிழ் நாடு மின் பகிர்மான கழகத்திற்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது. **( ந.க.எண். 999 /2018 /இ1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.655, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.5

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 8 இல் உள்ள கிராமசாவடி தெருவில் உள்ள காந்திஜி பூங்கா கழிப்பறை கட்டணம் திரு.ப.சிவநேசன் , வார்டு 2 பத்துநோன்பு பள்ளிவாசல் தெருவில் வசித்து வரும் நபர் 21.02.2018 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் கலந்து கொண்டு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்டு மேற்காணும் கட்டணக்கழிப்பறை எடுத்து நடத்தி வருகிறார். தற்போது இந்நகராட்சியில் வார்டு எண்12, பொம்மஜ்ஜியம்மன் கோவில் தெருவில் (வேல்முருகன் தியேட்டர் அருகில்) புதிதாக கட்டப்பட்டுள்ள கழிப்பறையால் தான் நடத்திவரும் கட்டண கழிப்பறைக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது என 26.03.2019 அன்று ஏலதாரர் திரு.ப.சிவநேசன் என்பவர்காந்திஜி பூங்காவில் உள்ள கட்டண கழிப்பறையை தொடர்ந்து என்னால் நடத்த இயலாது என விண்ணபப்ம் கொடுத்துள்ளார். எனவே மேற்காணும் கட்டண கழிப்பறையை இந்நகராட்சி மூலம் துறைரீதியாக வசூல் பணி செய்வதில் மராமத்து பணிகள், மின்கட்டணம் மற்றும் இரசீது வகைகள் மூலம் வசூல் பணி மேற்கொண்டால் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளதால்.மேற்காணும் கட்டண கழிப்பறையை மறு பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.3015/2017/அ1)**

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.656, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.6

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.649 நாள் **18.07.2019** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **09.08.2019** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. **(945/2018/இ1)**

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத் தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சி உரக்கிடங்கின் அருகில் பழுதடைந்து மக்கள் பயன்பாடின்றி உள்ள மற்றும் ஒரு வாம்பே கழிவறையினை பராமரிப்பு பணிகள் செய்தல் | 9.50 | திரு.பி.முருகன் | 0.03% | – |
| | | | திரு.அ.தெய்வேந்திரன் | – | 0.09% |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.03% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.பி.முருகன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.657, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.7

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**635** நாள் **18.07.2019** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **07.08.2019** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**( ந.க.எண். 2248/2019/இ1)**

| வ. எ | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|

| ண். | | தொகை ரூ.இலட்சத்தில் | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
|---|---|---|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சி வார்டு எண்-13ல் உள்ள காஞ்சிமரத்துறை சாலையிலிருந்து பகவதியம்மன் கோயில் வரை உள்ள சாலையின் பக்கவாட்டில் தடுப்புச்சுவர் அமைத்தல் | 3.10 | திரு.சி.சேரலாதன் | 0.03% | – |
| | | | திரு.அ.தெய்வேந்திரன் | – | 0.09% |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.03% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.சி.சேரலாதன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.658 ,அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.8**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**634** நாள் **18.07.2019** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **07.08.2019** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.2251 /2019 /இ1)**

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சி வார்டு எண்- 3ல் உள்ள கீழ்க்கூடலூர் கம்போஸ்ட் தெருவில் முடிவில் உள்ள அங்கன்வாடி மையம் முதல் சிறுபாலம் வரை CMP முறையில் தார்ச்சாலை அமைத்தல் | 4.50 | திரு.சி.சேரலாதன் | 0.01% | – |
| | | | திரு.அ.தெய்வேந்திரன் | – | 0.05% |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.01% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.சி.சேரலாதன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.659,அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.9**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-3ல் உள்ள கீழக்கூடலூர் கம்போஸ்ட் தெரு குறுக்குத் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலத்துடன் புதிய பேவர் பிளாக் சாலை அமைக்க ரூ.**9.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.மேற்படி மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது. **( ந.க.எண்.2560 /2019/இ1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.660, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.10**

கூடலூா் நகராட்சி வார்டு எண்-3ல் அண்ணாநகரில் உள்ள ஆண்கள் பொது கழிப்பறையினை மராமத்து பணிகள் மேற்கொள்ள ரூ.9.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது. **(ந.க.எண். 2561 /2019/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**<u>தீர்மான எண்.661, அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள்.11**

கூடலூா் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண். 637 நாள் **18.07.2019** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **27.08.2019** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**( ந.க.எண்.2246/2019 /இ1)**

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத் தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூா் நகராட்சியில் வார்டு எண்-21ல் அமைந்துள்ள அம்பேத்கார் காலனி 1வது தெருவில் கிராவல் மன் நிரப்பி பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 5.80 | திரு.கே.வனராஜ் | 0.02% | – |
| | | | திரு.டி.சித்திரேசன் | – | 0.05% |

**அலுவலகக் குறிப்பு : –**வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.02% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.கே.வனராஜ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம் .

**<u>தீர்மான எண்.662, அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள்.12**

கூடலூா் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண். 636 நாள் **18.07.2019** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **27.08.2019** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது..**( ந.க.எண்.2247/2019 /இ1)**

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத் தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூா் நகராட்சியில் வார்டு எண்-21ல் அமைந்துள்ள அம்பேத்கார் நகர் முதல் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 7.15 | திரு.கே.வனராஜ் | 0.02% | – |
| | | | திரு.டி.சித்திரேசன் | – | 0.07% |

**அலுவலகக் குறிப்பு :–**வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.02% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.கே.வனராஜ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம் .

**தீர்மான எண்.663,அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.13**

கூடலூர் நகராட்சியில் சாதாரண உள்ளாட்சித் தேர்தல் 2019 – மறுவரையறை செய்யப்பட்ட புதிய வார்டு வாரியாக தொடர்புபடுத்தும் பட்டியல் (Correlation Statement), வாக்குச்சாவடி பட்டியல் (கலம் 8 & 24) மற்றும் வாக்குச்சாவடி வரைபடம் (Autocad Sketch) தயார் செய்ய ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் நாள் **15.06.2019** ஆம் தேதி **சனிக்கிழமை** முற்பகல் 11.00 மணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

| **வ. எண்.** | **பணியின் பெயர்** | **நிறுவனத்தின் பெயர்** | **விலைப்புள்ளி தொகை (ரூபாய்) (செட் ஒன்றுக்கு)** |
|---|---|---|---|
| 1 | சாதாரண உள்ளாட்சித் தேர்தல் 2019 – மறுவரையறை செய்யப்பட்ட புதிய வார்டு வாரியாக தொடர்புபடுத்தும் பட்டியல் (Correlation Statement), வாக்குச்சாவடி பட்டியல் (கலம் 8 & 24) மற்றும் வாக்குச்சாவடி வரைபடம் (Autocad Sketch) தயார் செய்ய | திரு.ப.சரண்ராஜ், ரோஸ்கம்ப்யூட்டர்ஸ், கூடலூர் | ரூ.21905/- |
| | | திரு.சரவணன், சரண் கம்ப்யூட்டர்ஸ், கம்பம் | ரூ.27850/- |
| | | திரு.ராஜேஸ், ஆப்பிள் கம்ப்யூட்டர்ஸ், கம்பம் | ரூ.28125/- |

<u>அலுவலக குறிப்பு</u>

1. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **திரு.ப.சரண்ராஜ், ரோஸ்கம்ப்யூட்டர்ஸ், கூடலூர்–**க்கு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களிடம் முன்அனுமதி பெற்று உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.664, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.14**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர், இயக்குநர் அவர்களது கடித ந.க.எண்.648/2019/அ2 நாள்.30.07.2019 கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, கூடலூர் நகராட்சியின் 2019-2020-ம் ஆண்டிற்கான பங்களிப்பு தொகை ரூ.20000/-(ரூபாய் இருபதாயிரம் மட்டும்) கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்:997/2017/சி1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.665, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.15**

தேனி மாவட்டம் இரண்டாம் நிலை நகராட்சியான கூடலூரில் 32 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 41924 மக்கள்தொகையுடன் 11685 குடியிருப்புகள் 21 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பணியில் 39 DBC பணியாளர்கள் 6 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு குழு ஒன்றுக்கு 6 நபர்கள் வீதம் அதாவது ஒவ்வொரு நபரும் நாள் ஒன்றுக்கு 50 வீடுகளில் பணிகளை மேற்கொள்ள 1 குழுவில் உள்ள 6 DBC பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு 300 வீடுகளில் வீடு வீடாக சென்று தண்ணீர் தொட்டிகளையும், தரைத் தள தொட்டிகளை பார்வையிட்டு கொசு உற்பத்திக்கு எதுவாக திறந்திருக்கும் தொட்டிகளில் தேவைப்பட்டால் அபேட் மருந்து ஊற்றி கொசுப்புழுக்களை அழித்தும் கொசுப்புழு வளர்ந்து காணப்பட்டால் தண்ணீரை அப்புறப்படுத்தியும் வீட்டின் சுற்றுப்புறத்தில் உள்ள தேவையற்ற பொருட்களான டீ

கப்,தேங்காய் ஓடு, பழைய பிளாஸ்டிக் பைகள், டயர்களை அப்புறப்படுத்தியும் பொது மக்களுக்கு டெங்கு நோய் பரவும் காரணங்களை எடுத்துக்கூறி விழிப்புணர்வும் கொடுக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட DBC பணியாளர்களுக்கு தேனி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை உத்திரவின் 39 DBC பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.208 மற்றும் தொழிலாளர் சேமநலநிதி 25% ரூ.52 சேர்த்து ரூ.260 வீதம் ஜனவரி 2019 முதல் ஜூலை 2019 வரை ஊதியத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்கிட நகர்மன்றத் தீர்மான எண் 564 நாள் 08.03.2019 –இல் அனுமதி பெறப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு தொகை வழங்கப்பட்டு வருகிறது. தற்சமயம் மழைக்காலம் என்பதால் டெங்கு மற்றும் சிக்கன் குனியா போன்ற தொற்று நோய்கள் பரவும் சூழ்நிலை இருப்பதால் பரவாமல் தடுக்கும் பொருட்டும், பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும் தினக்கூலி அடிப்படையில் மாவட்ட ஆட்சியரகத்தின் வழிகாட்டுதலின் படி நாள் ஒன்றுக்கு ரூ260/–வீதம் ஆகஸ்ட் 2019 மற்றும் செப்டம்பர் 2019 ஆகிய இரு மாதங்களுக்கு டெங்கு களப்பணியாளர்களை பணியமர்த்தி மற்றும் உரிய நுஞுகு செலுத்தி 39 DBC (Dengue breeding checkers) பணியாளர்களை பணியமர்த்தி தொடர்ந்து பணிகளை மேற்கொள்ள உண்டாகும் உத்தேச செலவீனம் ரூ764086/– க்கான பட்டியல்

<u>செலவீனப் பட்டியல் கீழ்க்கண்டவாறு ஆகஸ்ட் 2019 மற்றும் செப்டம்பர் 2019 (2019–20)</u>

| | | |
|---|---|---|
| 1) | நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ 260 வீதம் (ஆகஸ்ட் 2019 மற்றும் செப்டம்பர் 2019 ) (61* 260 * 39) | = ரூ. 618540 |
| 2) | தொழிலாளர் சேம நல நிதி (13.15 %) | = ரூ. 81338 |
| 3) | தொழிலாளர் ESI (4.75%) | = ரூ. 29381 |
| 4) | தொழிலாளர் LIC (50* 39* 2) | = ரூ. 3900 |
| 5) | நிர்வாக செலவு 5% | = ரூ. 30927 |
| | **மொத்தம்** | **ரூ** 764086 |

கொசு ஒழிப்பு பணிக்காக 39 DBC பணியாளர்கள் பணியமர்த்த 2 மாதங்களுக்கு (ஆகஸ்ட் 2019 மற்றும் செப்டம்பர் 2019) உத்தேச செலவீனம் ரூ 764086/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்:2438/2019/இ1)**

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவினத்தினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவு செய்ய மேற்கொள்ளலாம்

**தீர்மான எண்.666, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.16

கூடலூர் நகராட்சியில் உள்ள வார்டு எண்-13 வார்டு எண்-8 பூங்கா ஆகிய இரண்டு இடங்களில் உள்ள மேல்நிலை தொட்டி மற்றும் வார்டு எண்-21,கார்நிலையத்தெருவில் உள்ள தரைத்தொட்டி ஆகிய இடங்களில் இரவு மற்றும் பகல் நேரங்களில் காவல் பணிபுரிய 2019–20 ஆம் ஆண்டு பொதுப்பணித்துறையின் தரவிலை அட்டவனையில் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் மூலம் 4 நபர்களை பெற்று பணியமர்த்தவும், பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு பட்டியல் வழங்க உண்டாகும் உத்தேச செலவினத்தொகை ரூ.5.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு **(ந.க.எண்:2635/2019/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.667, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.17**

கூடலூர் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள மூன்று நீர் தேக்கத்தொட்டிகளில் இருந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு நகராட்சி பகுதியில் உள்ள வால்வுகளை ஆப்ரேட் செய்வதற்கும் மேலும் மேல்நிலை நீர் தேக்கத்தொட்டியில் இரவு மற்றும் பகல் நேரங்களில் காவல் பணி பார்பதற்கும் 2019–20 ஆம் ஆண்டு பொதுப்பணித்துறையின் தரவிலை அட்டவனையில் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில் நான்கு நபர்களை ஒப்பந்ததாரர் மூலம் ஒரு ஆண்டுற்கு பெற்று பணிகள் மேற்கொள்ள உண்டாகும் உத்தேச செலவினத்தொகை ரூ.5.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்:2638/2019/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.668, அனுமதிக்கப்பட்டது.**
**பொருள்.18**

கூடலூர் நகராட்சியில் ஒப்பந்ததாரர் மூலம் 2018-19 ஆம் ஆண்டிற்கு பொறியியல் பிரிவில் உள்ள SKY LADER வாகனத்திற்கு ஒட்டுநர் மற்றும் பொறியாளருக்கு அலுவலக உதவியாளர் மற்றும் குடிநீர் பிரிவில் மதகு திறப்பாளர் என 5 நபர்களை பெற்று பணி மேற்கொண்டதில் ஒப்பந்தா காலம் மார்ச் 2019 உடன் முடிவடைகிறது பாராளாமன்ற தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலியில் இருந்ததால் புதிதாக ஒப்பந்தப்புள்ளிகள் பெற இயாலவில்லை மேற்படி பணிகள் பொறியியல் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் அத்தியவிசயமான பணிகள் ஆவாதால் ஏற்கனவே பணியாளர்களின் விநியோகம் செய்து வந்த ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் அவர்களின் மூலம் ஆட்கள் பெற்று ஜீலை 2019 வரை பணி மேற்கொண்டதையும் ஆட்கள் விநியோகம் செய்தாமைக்கு பட்டியல் தொகையாக ரூ.1,83,542/-வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்: 61/2018/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.669, அனுமதிக்கப்பட்டது.**
**பொருள்.19**

கூடலூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–19ன் கீழ் 5 டன் கொள்ளளவு கொண்ட நுன் உரம் செயலாக்க மையம் அமைக்க ரூ.68.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நுன் உரம் செயலாக்க மையம் அமைக்க உத்தேசிக்கப்பட்ட இடத்தில் பணியினை துவக்க செல்லும் போது அப்பகுதி மக்கள் நுன் உரம் செயாலக்க மையம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்தனர்.அதன் காரணமாக நகராட்சி சொந்தமான குப்பைக்கிடங்கில் உரம் செயலாக்க மையத்தினை அமைக்க உத்தேசிக்கப்பட்டது.அதன்படி நுன் உரம் செயலாக்க மையம் அமைக்க தேவையான பகுதிக்கு ஏற்ப ஏற்கனவே உள்ள குப்பைகளை அகற்றிட உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.4,50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்:2624 /2019/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.670, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.20**

கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-5ல் உள்ள முனியாண்டி கோயில் தெருவில் , முனியாண்டி கோயிலின் முன்புறம் சேதமடைந்துள்ள மழைநீர் வடிகாலினை புதிதாக அமைக்க ரூ.1,70,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்:2634/2019/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.671, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.21

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வுகூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதின்படி கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-1 முதல் 10 வரை உள்ள ஆழ்துழை கிணறுடன் கூடிய சிறுமின் விசை பம்புகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு நிறுவிட ரூ.7,00,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்:2636/2019/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.672, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.22

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வுகூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதின்படி கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-11 முதல் 21 வரை உள்ள ஆழ்துழை கிணறுடன் கூடிய சிறுமின் விசை பம்புகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு நிறுவிட ரூ.7,40,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்:2637/2019/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.673, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.23

தேனி மாவட்டம் இரண்டாம் நிலை நகராட்சியான கூடலூரில் 32 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 41924 மக்கள்தொகையுடன் 11685 குடியிருப்புகள் 21 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பணியில் 39 DBC பணியாளர்கள் 6 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு குழு ஒன்றுக்கு 6 நபர்கள் வீதம் அதாவது ஒவ்வொரு நபரும் நாள் ஒன்றுக்கு 50 வீடுகளில் பணிகளை மேற்கொள்ள 1 குழுவில் உள்ள 6 DBC பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு 300 வீடுகளில் வீடு வீடாக சென்று தண்ணீர் தொட்டிகளையும், தரைத் தள தொட்டிகளை பார்வையிட்டு கொசு உற்பத்திக்கு எதுவாக திறந்திருக்கும் தொட்டிகளில் தேவைப்பட்டால் அபேட் மருந்து ஊற்றி கொசுப்புழுக்களை அழித்தும் கொசுப்புழு வளர்ந்து காணப்பட்டால் தண்ணீரை அப்புறப்படுத்தியும் வீட்டின் சுற்றுப்புறத்தில் உள்ள தேவையற்ற பொருட்களான டீ கப்,தேங்காய் ஓடு, பழைய பிளாஸ்டிக் பைகள், டயர்களை அப்புறப்படுத்தியும் பொது மக்களுக்கு டெங்குநோய் பரவும் காரணங்களை எடுத்துக்கூறி விழிப்புணர்வும் கொடுக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட DBC பணியாளர்களுக்கு தேனி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை உத்திரவின்படி 39 DBC பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ208 மற்றும் தொழிலாளர் சேமநலநிதி 25% சேர்த்து ரூ.260 வீதம் ஜனவரி 2019 முதல் ஜூலை 2019 வரை ஊதியத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்கிட நகர்மன்றத் தீர்மான எண் 564 நாள் 08.03.2019 –இல் அனுமதி பெறப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம் தினக்கூலி அடிப்படையில் மாவட்ட ஆட்சியரகத்தின் வழிகாட்டுதலின் படியும், சேமநலநிதி 25% சேர்த்து நாள் ஒன்றுக்கு ரூ.260 வீதம் ஆகஸ்ட் 2019 மற்றும் செப்டம்பர் 2019 வரை உரிய EPF செலுத்தி 39 DBC (Dengue breeding checkers) பணியாளர்களை பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தற்போது மேற்காணும் டெங்கு களப் பணிகளை அக்டோபர் 2019 முதல் டிசம்பர் 2019 வரையிலான3 மாதங்களுக்கு தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சியரின் (2019–20) செயல்முறை உத்திரவின்படி தினக்கூலி அடிப்படையில் 39 நபர்களை பணியில் ஈடுபடுத்தினால் ஏற்படும் செலவினம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

1) நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ 217 வீதம் (அக்டோபர் 2019 முதல் டிசம்பர் 2020 )

(92* 217 * 39 ) = ரூ 778596

2) தொழிலாளர் சேம நல நிதி (13.15 %) = ரூ 102385

3) தொழிலாளர் ESI (4.75%) = ரூ 36983

4) தொழிலாளர் LIC (50* 39* 3) = ரூ 5850

5) நிர்வாக செலவு 5% = ரூ 38930

------------

**மொத்தம்** **962744**

------------

கொசு ஒழிப்பு பணிக்காக 39 DBC பணியாளர்கள் பணியமர்த்த 3 மாதங்களுக்கு ( அக்டோபர் 2019 முதல் டிசம்பர் 2019 ) உத்தேச செலவினம் ரூ 9,70,000/– ஐ பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனியார் மூலம் பணி செய்ய மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க எண்:2687/2019/எச்1)**

**அலுவலகக்குறிப்பு:-**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண்.674, அனுமதிக்கப்பட்டது.**
**பொருள்.24**

கூடலூர் நகராட்சியில் அனைத்துப் பிரிவுகளிலும் பயன்படுத்தப்படும் பதிவேடுகள், படிவங்கள் மற்றும் கணினிக்கு தேவைப்படும் மென்பொருட்கள் 2019–2020 ஆம் ஆண்டிற்கு வாங்க அதன்படி அனைத்து பிரிவு எழுத்தர்களின் கோரிக்கையின்படி தேவையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.246/2017/D1)**

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.675, அனுமதிக்கப்பட்டது.**
**பொருள்.25**

இந்நகராட்சியில் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தினை செயல்படுத்த விழிப்புணர்வு மேற்கொள்ள கீழ்க்கண்ட இனங்களுக்கு கடந்த 14.08.2019 உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டு தேர்தல் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று உத்திரவு வழங்கப்பட்டு, அச்சடித்து பெறப்பட்ட வகையில் திரு.G.கார்த்திக்கேயன், கம்பம் அவர்களிடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.72418/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்:2208/2019/எப்1)**

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.676, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.26**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட வசதிகள் 2019–ன்படி நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் அனைத்து கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு கட்டாயம் உருவாக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கூடலூர் நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் அனைத்து கட்டிடங்களுக்கும் கட்டிட அனுமதி கோரி வரும் விண்ணப்பங்களில் 15.09.2019 ஆம் தேதி முதல் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புக்கான வைப்புத் தொகை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்து வசூல் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்:2208/2019/எப்1)**

**Deposit for RWH**

**for RESIDENTIAL**

500 to 1000 Sq.Ft Rs. 3500/-

| | |
|---|---|
| 1001 to 1500 Sq.Ft | Rs. 5000/- |
| 1501 to 2500 Sq.Ft | Rs. 7500/- |
| Above 2500Sq.Ft | Rs. 10000/- |
| **for COMMERCIAL** | |
| 0 to 500 Sq.Ft | Rs. 6000/- |
| 501 to 1000 Sq.Ft | Rs. 8000/- |
| 1001 to 2500 Sq.Ft | Rs. 12000/- |
| Above 2500Sq.Ft | Rs. 15000/- |

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புக்கான வைப்புத் தொகையினை 15.09.2019ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்திட மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. கட்டிட உரிமையாளர்களால் உரிய முறையில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்து உரிய புகைப்படம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் நேராய்வு செய்து உரிய வழிமுறைகளின்படி அமைக்கப்பட்டிருந்தால், வைப்புத்தொகையினை அக்கட்டிட உரிமையாளருக்கு திரும்ப வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.677, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.27**

இந்நகராட்சியில் சாதாரண உள்ளாட்சித் தேர்தல் 2019க்கான வார்டு மறுவரையறை செய்யப்பட்ட புதிய வார்டு வாரியாக தொடர்புபடுத்தும் பட்டியல் மற்றும் வாக்குசாவடி வரைபடம் தயார் செய்ய கடந்த 15.06.2019 உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டு தேர்தல் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று உத்திரவு வழங்கப்பட்டு, பணி முடிக்கப்பட்டு திரு.ப.சரண்ராஜ், ரோஸ்கம்ப்யூட்டர்ஸ், கூடலூர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.153335/—ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்:830/2016/எப்1)**

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.678, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.28**

இந்நகராட்சியின் கட்டுபாட்டில் இயங்கிவரும் அம்மா உணவகம் மற்றும் DBC பணியாளர்கள் ஆகியோரின் மாத ஊதியத்தில் 04/2015 முதல் 01/2019 முடிய மற்றும் 05/2019 முதல் 10/2018 முடிய உள்ள காலங்களுக்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பங்களிப்பு மற்றும் நகராட்சியின் பங்களிப்பு தொகையினை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி, ஆணையாளர், மதுரை அவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத வகையில் மேற்கண்ட காலங்களுக்கு ரூ.2082394/-யை செலுத்தக்கோரி 15.03.2019ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு மேற்காணும் தொகையில் ரூ.5,00,000/-யை கடந்த 16.04.2019ல் செலுத்தப்பட்டு,மேல் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கவும் இவ்வலுவலக கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கானும் தொகை செலுத்தப்பட்டமைக்கும், மீதத்தொகையான ரூ.15,82,394/-யை செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.2055/2018/பி1)**

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.679, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.29**

கூடலூர் நகராட்சியில் 2014-15 ஆம் நிதி ஆண்டில் திரு.அமீர்சுல்த்தான் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வார்டு எண்-7 அரசு விதைபண்ணை சாலையில் உள்ள மயானத்தில் காத்திருப்போர் கூடம் அமைத்தல் பணியினை செய்து முடித்து பட்டியல்

பெற்றுள்ளார்.அன்னாருக்கு பட்டியல் வழங்கும் போது பட்டியலில் பிடித்தம் செய்த கூடுதல் வைப்புத்தொகை ரூ.27,200/- மற்றும் பணிக்கு செலுத்திய EMD தொகை ரூ.6800/- ஆகியவற்றினை வழங்குமாறு **20.08.2019** ஆம் நாளன்று விண்ணப்பம் கொடுத்துள்ளார்.அன்னாரின் மேற்படி தொகையானது காலங்கடந்த வைப்புத்தொகை ஆகும். மேற்படி பதிவுகள் இந்நகராட்சி காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேடு 2019-20ல் வரிசை எண் **1** மற்றும் **81**ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.**34,000**/-ஐ ஒப்பந்தாரர் திரு.என்.அமீர்சுல்தான் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.1905/2019/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.680, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.30**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-**15**,கன்னிகாளிபுரம் மெயின் தெருவில் உயர் மின் கோபுர விளக்கு அமைக்க ரூ.**6,50,000**/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.2629/2019/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மான எண்.681, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.31**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-2, எல்லைத்தெரு, வார்டு எண்-**1**,கள்ளர்மடத்து தெரு மற்றும் வார்டு எண்-**3**,கள்ளர் கிழக்கு தெரு சந்திப்பில் உள்ள நோட்டக்கார புளியமரத்தின் அருகில் உயர் மின் கோபுர விளக்கு அமைக்க ரூ.**6,50,000**/- க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.2630/2019/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மான எண்.682, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.32**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-**4**,சுந்தரராஜபுரத்தில் உள்ள சமுதாய கழிவறைக்குரிய செப்டிக் டேங்க் சேதமடைந்துள்ளது. அதனை கழிவுநீர் அகற்றும் வாகனம் மூலம் நீரினை அகற்றி சேதமடைந்த செப்டிக் டேங்கினை காண்கிரீட் அமைத்து சரி செய்வதற்கு ரூ.**35,000**/-க்கு தயார் செய்யபட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.2631/2019/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியின் மூலம் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.683, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.33**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-**4**,சுக்காங்கல்பட்டி மெயின் தெருவில் தென்புறம் உள்ள முதல் குறுக்கு தெருவில் புதிதாக மழைநீர் வடிகால் அமைத்திட ரூ.**20,000**/-க்கு தயார் செய்யபட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.2642/2019/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய்

நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.684, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.34**

கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-5, AMC தெருவில் உள்ள பெண்கள் கழிவறையின் அருகில் உள்ள சிறு மின்விசை பம்பின் அருகில் அமைந்துள்ள சேதமடைந்த சிறுபாலத்தினை புதிதாக அமைக்க ரூ.42,000/-க்கு தயார் செய்யபட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.2632/2019/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.685, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.35**

கூடலூர் நகராட்சியில் உள்ள வார்டு எண்-7ல் உள்ள அரசு விதைப்பண்ணை தெருவில் உள்ள நகராட்சி பொது சுகாதார வாகனங்கள் நிறுத்திமிடத்தின் முன்புறம் மழைநீர் வடிகால் அமைப்பதற்கு ரூ.2,30,000/-க்கு தயார் செய்யபட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.2628/2019/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.686, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.36**

கூடலூர் நகராட்சியில் உள்ள வார்டு எண்-19ல் உள்ள கொத்தனார் தெருவில் அமைந்துள்ள சேதமடைந்த சிறுபாலத்தினை புதிதாக அமைப்பதற்கு ரூ.22,000/-க்கு தயார் செய்யபட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.2633/2019/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.687, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.37**

கூடலூர் நகராட்சியில் 21 வார்டுகளிலும் உள்ள சிறுமின்விசை பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு உண்டாகும் உத்தேச செலவினம் **ரூ.9.80** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு : – 1)** மன்றம் அனுமதிக்கலாம்
**2)** மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.688, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.38**

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கூடலூர் நகராட்சி பகுதியில் கோடை காலத்தில் பேருந்து நிலையம் மற்றும் பெட்ரோல் பல்க் முன்புறம் ஆகிய இரண்டு இடங்களில் Stand உடன் கூடிய 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டக்ஸ் தொட்டிகள் வைத்து தினசரி குடிநீர் நிரப்பி பொது மக்களுக்கு வழங்கியதற்கும் வழங்க உண்டான செலவினம் ரூ.1,50,000/-ஐ பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் அவர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண். 2837/2019/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.689, அனுமதிக்கப்பட்டது.**

**தனி ஆலுவலர்(ம)ஆணையாளர்**
**கூடலூர் நகராட்சி**